# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அவசியமும் நாடுகடந்த அரசின் பின்னணியும்



**பேராசிரியர் தீரன்.**

ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் இவர் அதிகளவில் பிரபலம் பொறாதபோதும், தமிழீழத் தேசியத்திற்காகவும், ஈழத் தமிழ் மக்களுக்காகவும் இன்றுவரை அயராது பாடுபடுபவர். 1989ம் ஆண்டளவில் பாட்டாளி மக்கள் கட்சியை (பா.ம.க) உருவாக்கி அதன் தலைமைப் பொறுப்பை வகித்த பெருமை இவரையே சாரும்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர். ராஜீவ் காந்தி கொலையின் பின்னர், தமிழகத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாடு அதாவது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவதோ, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவதோ குற்றம் என்பது போன்று மக்கள் அச்சப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலை உருவாக்கப் பட்டுக்கொண்டிருந்த நிலையில், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்புவது பயங்கரவாதமாக, துரோகமானதாக பார்க்கப்பட்ட நிலையில், 1992ம் ஆண்டளவில் ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை மூன்று நாட்கள் நடத்தி, மாநாட்டின் முடிவில் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படங்களைப் பெருமளவில் தாங்கிய பிரமாண்டமான பேரணியை நடத்தி தமிழக மக்களின் உணர்வலைகளை ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக மீண்டும் திருப்புவதில் பெரும் வெற்றி கண்டவர். 1995ம், 1997ம் ஆண்டுகளிலும் இவ்வாறான மாநாடுகளை நடத்தி தமிழக மக்களின் உணர்வலைகளை ஈழத் தமிழர்கள் பக்கம் வைத்திருப்பதில் பெரும்பங்காற்றியவர்.

இதனாலேயே, 1998ல் பா.ம.கவின் தலைவர் பதவியில் இருந்து இவர் வெளியேற வேண்டிய நிர்ப்பந்த நிலையும் ஏற்பட்டது. ஆனாலும், ஈழத் தமிழர்களுக்கும், தனித் தமிழீழம் அமையவேண்டும் என்பதிலும் இன்னும் உறுதியோடு செயற்பட்டு வருகின்றார். அதற்காக பல நெருக்கடிகளைச் சந்தித்தபோதும், உறுதியோடு அதற்கான பணிகளை முன்னெடுக்கின்றார். தற்போது பசுமைத் தமிழகம் எனும் அமைப்பை உருவாக்கி விவசாயிகளுக்காக அரும்பணியாற்றி வருபவர். அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட இவரை ஈழமுரசு சந்தித்து கலந்துரையாடியது. இதன்போது தற்போது புலம்பெயர்ந்த நாடுகளில் நடைபெறும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான மீள் வாக்கெடுப்பும், அதற்கு முற்றிலும் முரணான வகையில் நகரும் நாடு கடந்த அரசின் செயற்பாடும் குறித்து தனது காரசாரமான கருத்துக்களை முன்வைத்தார். நாடு கடந்த அரசின் செயற்பாட்டுக்குப் பின்னால் பல வலிமையான கரங்கள் இருக்கின்றன என்று குற்றம்சாட்டினார். அவருடான சந்திப்பை ஒரு பேட்டி வடிவில் அல்லாமல், அதனை தொடர் கட்டுரை வடிவில் இங்கு தருகின்றோம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

இந்திய அரசாங்கமானது போராளிக்களுக்கு பயிற்சி கொடுத்தமையானது ஒருவகையில் நன்மையாகவும் இருந்தது. இன்னொருவகையிலே அது தீமையாகவும் இருந்தது.

நன்மையாக முடிந்தது என்ன என்று பார்த்தால், அங்கு எடுத்த அந்த ஆயுதப் பயிற்சியானது தமிழீழத்திலே களத்திலே நின்று போராடுகின்ற நம்முடைய போராளிகளிற்கு சிங்கள இராணுவத்தை எதிர்த்துப் போரிடக்கூடிய அளவிற்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தது என்பது நமக்கு ஒரு சாதகமாக அமையும். பாதகமான அம்சம் என்னவென்றால், இந்தியா பயிற்சி கொடுத்தபொழுது, இந்தியாவின் கட்டளைகளுக்கு எல்லாம் நாம் அடிபணிந்துதான் தீரவேண்டுமென்று எல்லாப் போராளிக் குழுக்களும் நினைத்தனர். அவ்வாறே செயற்பட்டனர்.

## போராட்டத்தின் உச்சமாக முத்துக்குமார் போன்ற மாவீரர்கள் தங்களுடைய தேகத்திலே தீயை மூட்டினார்கள்

அப்படித்தான் உளவுத்துறையானது அவர்களைப் பயன்படுத்தியது. ஆனால் ஒரே ஒரு போராளிக்குழு நம்முடைய தேசியத்தலைவர் பிரபாகரன் தலைமையில் இருந்த விடுதலைப் புலிகள் மட்டும் தங்களுடைய கோரிக்கையிலிருந்து அதாவது தனித் தமிழீழ தாயகத் தனியரசு என்ற கோரிக்கையிலிருந்து விலகமறுத்தனர்.

எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காலத்திலும் எந்த நாட்டினுடைய வற்புறுத்தலுக்கும் நாங்கள் இணங்கமாட்டோம். இந்தக் கோரிக்கை வெற்றி பெறுவதற்காக நீங்கள் உதவினால், எங்களிற்கு ஒத்துழைத்தால் நியாயம் எங்கள் பக்கம் இருப்பதாக நீங்கள் நினைத்தால், 1833ற்குப் பின்னர் தானே எங்களுடைய அரசுகளை இழந்திருக்கின்றோம். 1833 இற்கு முன்னால் நாங்கள் இருந்த இடத்தை தமிழ் மன்னர்கள் தாங்கள் தாங்கள் என ஆண்டுவந்திருக்கின்றார்கள். எனவே இது ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் என்பதற்குப் பின்னாலேதான், அவர்களுடைய அரச நிர்வாகத்திற்காக சிங்களவர்களும் தமிழர்களும் ஆண்ட பகுதிகள் ஒன்றாக இணைக்கப்படுகின்றன. ஆனால் அதற்கு முன்பும் அவரவர் பகுதியை அவரவர்கள் தனித்தனியாக ஆண்டிருக்கின்றார்கள் என்பது வரலாற்று ரீதியான உண்மை. இந்த உண்மைகளை தேசியத் தலைவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்.

எனவே எங்களுடைய பாரம்பரிய தாயக அரசைப் பெறுவதற்கு யார் உதவி செய்தாலும் அவர்களுடைய கருத்தை நாங்கள் கேட்போம். அவர்களுக்கு நாங்கள் என்றைக்கும் கடமைப் பட்டிருக்கின்றோம். ஆனால் அதைத் தவிர்த்து வேறு எந்தவிதமான சிறு சிறு உதவிகளிற்கோ அல்லது சிறு சிறு சலுகைகளிற்கோ எதற்காகவும் நாங்கள் இசையமாட்டோம் என்று தெளிவாகத் திட்டவட்டமாகக்கூறி, நம்முடைய தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மட்டுமே அந்தக் கொள்கையில் உறுதியாக இருந்தார்.

இதனாலே என்ன வந்ததென்றால், இந்தப் போராளிக் குழுக்களிற்குள்ளே பல பிரிவினைகள் ஏற்படுவதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இது நமக்கு இந்திரா காந்தியின் மூலமாக அந்தப் பயிற்சி மூலமாக ஏற்பட்ட ஒரு பாதகம் என்று சொல்லலாம்.

ஆக சாதக பாதகங்கள் எப்படியிருந்தாலும் கடைசி வரையிலே களத்திலே நின்று அந்த மக்களையும் பாதுகாத்துக்கொண்டு, கொண்ட கொள்கையையும் நிறைவேற்றவேண்டும் என்ற அடிப்படையிலே இறுதிவரை நின்று போராடுவது விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும்தான். இதனால்தான் பிற்காலங்களிலே அனைத்துப் போராளிக் குழுக்களும், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து விடுதலைப் புலிகள் இயக்கம்தான் எங்களுடைய ஏகப் பிரதிநிதி என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை தலைவர் உருவாக்கிக் காட்டுகின்றார். அதற்குக் காரணம் அவருக்குள்ள ஒருதொலைநோக்குப் பார்வை. அவருக்கு உள்ள ஒரு அரச தந்திர முறைகள். அவருக்குரிய நாட்டு மக்களின் மீதான பற்று. இவை எல்லாம் சேர்ந்துதான் தலைவரை ஒரு தொலைநோக்குப் பார்வையோடு கொண்ட கொள்கையிலே யாருக்கும் அடிபணியாமல், அஞ்சாமல் எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக்கொடுக்காத ஒரு பக்குவத்தை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

அந்த உறுதிப்பாடுதான் இன்றைக்கும் இலங்கையில் வாழக்கூடிய தமிழீழ மக்களானாலும்சரி அல்லது உலகத்திலே வாழக்கூடிய ஏனைய தமிழ் மக்களானாலும் சரி, அதாவது உலகத்திலே இன்று வாழக்கூடிய 8ல் இருந்து 9 கோடி தமிழ் மக்கள் இருக்கின்றார்களென்றால் ஒவ்வொரு மக்களிற்கும் ஒரு ஆசை இருக்கின்றது. அந்த ஆசை என்னவென்றால் நம்முடைய சேர, சோழ, பாண்டியர் காலத்திலே நமக்கென்று அரசுகள் இருந்தன. மானம், மரியாதையுடன் நாம் வாழ்ந்தோம். ஆனால் இப்பொழுது நமக்கென்று ஒரு அரசு இல்லை. அப்படிப்பட்ட ஒரு குறையை நீக்குவதற்காக இந்த நேரத்திலே ஒரு தலைவன் தோன்றிவிட்டான். அவன் உலகத் தமிழர்களிற்கு என்று ஒரு முகவரியைத் தருவதற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அந்தத் தியாய வேள்வியிலே ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறார். என்று சொல்லி உலகத் தமிழர்கள் எல்லாம் மிகப் பெருமையாக நினைத்து, வயதிலே அவர் குறைந்தவராக இருந்தாலும் அதாவது இளைய வயதினராக இருந்தாலும் தேசியத் தலைவர் பிரபாகரன் ஒருவர்தான் உலகத் தமிழர்களிற்கெல்லாம் ஓரே தலைவனாக வரக்கூடிய அளவிற்கு ஒரு மாபெரும் சக்தி என்பதை உலகத் தமிழர்கள் அனைவரும் ஒத்துக்கொண்டார்கள். அப்படிப்பட்ட கட்டத்திலேதான் இந்தப் போராட்டமானது 2009ல் குறிப்பாக ஜனவரியில் இருந்து போர் உச்ச கட்டத்திலே மிகப்பெரிய நெருக்கடிக்கு ஆளாகவேண்டியிருந்தது. இந்த நெருக்கடி வரும் என்பதைக்கூட தேசியத் தலைவன் பிரபாகரன் முன்கூட்டியே அறிந்து 2008ம் ஆண்டு மாவீரர் நாளன்று ஒரு பேச்சை உலகத் தமிழர்களிற்கு எடுத்துரைக்கிறார். என்னவென்றால் இதுவரையிலே நாங்கள் களத்திலிருந்து போராடியிருக்கின்றோம். இந்தப் போராட்டத்திலே எந்தக் காலத்திலேயும் இந்தக் கொள்கையிலிருந்து மாறப்போவதில்லை. இதைப்பெறுகின்றவரை கடைசி மாவீரர் இருக்கும் வரையிலே இந்தப் போராட்டம் நடைபெறும். நாம் தனித் தமிழீழத் தாயக அரசை உருவாக்கித்தான் தீருவோம் என்று உறுதிப்பட அவர் தெரிவித்திருந்தார்.




**இந்தியா பயிற்சி கொடுத்தபொழுது, இந்தியாவின் கட்டளைகளுக்கு எல்லாம் நாம் அடிபணிந்துதான் தீரவேண்டுமென்று எல்லாப் போராளிக் குழுக்களும் நினைத்தனர். அவ்வாறே செயற்பட்டனர். அப்படித்தான் உளவுத்துறையானது அவர்களைப் பயன்படுத்தியது. ஆனால் ஒரே ஒரு போராளிக்குழு தேசியத்தலைவர் பிரபாகரன் தலைமையில் இருந்த விடுதலைப் புலிகள் மட்டும் தங்களுடைய கோரிக்கையிலிருந்து அதாவது தனித் தமிழீழ தாயகத் தனியரசு என்ற கோரிக்கையிலிருந்து விலகமறுத்தனர்.**

போராட்டத்தை களத்திலிருந்து நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இப்பொழுது சர்வதேசச் சக்திகள் ஒரு விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்றுசொல்லிக் கொச்சைப்படுத்திக்கொண்டு இருந்த சூழ்நிலையிலே, இது பயங்கரவாதமல்ல ஒரு தேசிய இனத்தை இன்னொரு தேசிய இனம் ஆதிக்கம் செய்து கொண்டு 1948ல் விடுதலை பெற்ற காலகட்டத்திலே இருந்து தொடர்ந்து அடக்குமுறைச் சட்டங்கள் குடியுரிமைப் பறிப்புச் சட்டம், தரப்படுத்துதல் இப்படி வேலை வாய்ப்புக்களை பறிக்கின்ற சட்டம், இந்துக்கள் இருக்கின்றார்கள், முஸ்லீம்கள் என்று சொல்லக்கூடிய இஸ்லாமியர்கள் இருக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள், சிங்களவர்கள் இருக்கின்றார்கள். நான்கிற்கு மேற்பட்ட மதத்தவர்கள் இலங்கையில் வசிக்கின்றபொழுது இலங்கை அரசாங்கமானது 72 இலே பௌத்தம் மட்டுமே அரச மதம். சிங்களமொழி மட்டுமே அரச மொழி என்று சொல்லி வைக்கிறார்கள். அப்படியென்றால் ஏனைய மதங்கள் அங்கே புறந்தள்ளப் படுகின்றது. ஏனைய மொழிகளுக்கு அதாவது தமிழ் மொழிபேசும் மக்களிற்கு எந்தவிதமான உரிமையும் இல்லையென்று அந்த அளவிற்கு அவர்களுடைய நிலைமை தாக்கப்படுகிறது.

(31ம் பக்கம் பார்க்க)